# A study on Socio Economic Status of Internally Displaced Persons (IDPs) in Manmunai South West D.S. Division of Batticaloa District.

by

Pillaiyankuddy, Thangavel

Registration No:-EU/06/MDE/042

Index No: - EU/06/MDE/042

MDE34

Thesis
Library - EUSL

A dissertation submitted to post graduate unit the faculty of commerce and management, Eastern University, Sri Lanka as a fulfillment of the requirement of the master in development economics. (MDE) - 2010

Post graduate studies Unit,

Faculty of commerce and management,

Eastern University,

Sri Lanka

June 2008.

PROCESSED
Main Library, EUSL

# ஆய்வுச்சுருக்கம்

இலங்கையில் உள்ள தமிழர்கள் நாளுக்கு நாள் சொல்ல வொண்ணாத் துயரங்களுக்கும், துன்பங்களுக்கும் மத்தியில் அவல வாழ்வு வாழவேண்டிய நிலைக்கு இடப்பெயர்வுகள் வழியமைத்துள்ளன. இந்நிலையில் கடந்த 2006/2007 காலப்பகுதியில் இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தினைக் கைப்பற்றும் நோக்குடன் அரசினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது மக்கள் முழு அளவில் இடம்பெயர்வதற்கு வழியேற்பட்டது. இவ்விடப்பெயர்வினால் ஏற்பட்ட மக்களின் சமூகப்பொருளாதார நிலைமையினை அறியும்பொருட்டு **"மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ளக இடம்பெயர் மக்களின் சமூகப் பொருளாதார நிலை பற்றிய ஆய்வு."** எனும் தலைப்பில் இவ்வாய்வுக்கட்டுரை எழுதப்படுகிறது.

இவ்வாய்வானது ஐந்து அத்தியாயங்களில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றது. முதலாவது அத்தியாயமானது ஆய்வின் அறிமுகத்தினையும், இரண்டாவது அத்தியாய மானது ஆய்வு தொடர்பான நூலாய்வினையும், மூன்றாவது அத்தியாய மானது ஆய்வின் எண்ணக்கருவாக்கத்தினையும், ஆய்வு முறைகளையும் நான்காவது அத்தி யாயமானது ஆய்வு தொடர்பான தரவுகள் முன்வைப்பு, பகுப்பாய்வையும், ஐந்தாவது அத்தியாயமானது முடிவுரையையும், விதந்துரை களையும் உள்ளடக்கியுள்ளது.

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட 12 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்தும் விகிதாசார அடிப்படையில் 300 குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப் பட்டிருந்தன. இவ்வாறு ஆய்வுக்குட்படுத் தப்பட்ட வேளையில் அவர்களின் சமூகப் பொருளாதார நிலை மிகவும் மோசமடைந்தே காணப்பட்டது. அதாவது அடிப்படை வசதிகள், வாழ்வாதாரம், சுகாதார வசதிகள், உட்கட்டுமான விருத்தி, புனர்வாழ்வு சமூகநலன் வசதிகள், கல்வி, பொழுதுபோக்கு அம்சங்கள் போன்றவை மிகவும் மோசமடைந்தே காணப்படுகின்றன. இவைகளே இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சனையாகவும் காணப்படு கின்றன. இவ்வாய்வுப் பிரச்சனையைப் பூர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளாக மக்களின் உணவுத்தேவை யினைப்பூர்த்தி செய்தல், ஒழுங்கான தங்குமிட வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல், சிறந்த தொழில்வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மக்களின் வருமான மட்டத்தினை உயர்த்துதல், விவசாயத்தினை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், சிறந்த வைத்தியசுகாதார வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல், பொதுக்கிணறுகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அழிவடைந்த சொத்துக்களுக்கான நட்ட ஈட்டினை வழங்குதல், புதிய பொருளாதாரத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குதல், மக்கள் தமது ஓய்வு நேரத்தினைக் கழிப்பதற்காக நூலக வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

எனவே மீளக்குடியமர்த்தப்பட்ட மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகத் திற்குட்பட்ட மக்களின் சமூகப்பொருளாதார நிலையினைப்பற்றி அறிய விரும்பும் எந்தவோர் நபருக்கும் இவ்வாய்வானது ஒரு சான்றாக அமையும் என்பதில் எந்தச்சந்தேகமுமில்லை.

ஆய்வாளர்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்க எண் |
| நன்றியுரை | ii |
| ஆய்வுச்சுருக்கம் | iii |
| **Absract** | iv |
| அட்டவணைகள் | v |
| வரைபடம் | vi |
| அத்தியாயம் - 01 அறிமுகம் | 01 – 07 |
| அத்தியாயம் - 02 நூலாய்வு | 08 – 19 |
| அத்தியாயம் - 03 எண்ணக்கருவாக்கமும் ஆய்வு முறையும் | 20 – 27 |
| அத்தியாயம் - 04 தரவுகள் முன்வைப்பும், பகுப்பாய்வும் | 28 – 40 |
| அத்தியாயம் - 05 முடிவுரையும், விதந்துரைகளும் | 41 – 53 |
| உசாத்துணை நூல்கள் | 54 |
| வினாக்கொத்துக்கள் | 55 – 59 |